பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 10 புதன்கிழமை 27.09.2023 கதிர் 320

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்கு

## தாக்கல் செய்தது ஐக்கிய மக்கள் சக்தி

அரசின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரால் மேற்படி மனுவானது, நேற்றையதினம் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நாணய சபை, நிதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் உள்ளிட்டவர்கள் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மனுவைச் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

கோட்டாபய ராஜபக் ஷ மிச்சம் வைத்துவிட்டுப் போன ஆட்சியை ரணில்விக்கிரமசிங்க பொறுப்பேற்றது முதலே அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அடிக்கடி செய்திகள் வெளியாகின. மொட்டு (பொது ஜன பெரமுன) கட்சியே பல சமயங்களில் இந்தச் செய்தியைக் கசிய விட்டது. காரணம், மொட்டின் பல மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவி வழங்கும்படி ரணிலிடம் தொடர்ந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தமைதான்.

அமைச்சரவை மாற்றத்தை நிகழ்த்துவதாகக்காட்டிக்கொண்டாலும் அதை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலான காலமாகச்செய்யாமலேயே இழுத்தடித்து வந்தார் ரணில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்பதைப் ☞ 2

## இன்போடெல் கண்காட்சி நவம்பரில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நவீன இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக இலங்கை தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இன்போடெல் (INFO-TEL) தகவல் தொழில்நுட்ப கண்காட்சி' நவம்பர் 3 முதல் 5 வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ☞ 8

## கடன் முகாமைத்துவ நிறுவனத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

உள்நாட்டு அரச கடன் முகாமைத்துவ நிறுவனத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று அரச தகவல்திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் நிறுவன மீள்கட்டமைப்பாக சுயாதீன அரச கடன் முகாமைத்துவ நிறுவனமொன்றை நிறுவுவதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன சர்வதேச நாணய நிதி விரிவாக்கக் கடன் வசதிகளின் கீழ் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ள ☞ 2

## நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் ஆட்சிக்கு வந்ததும் மறுசீரமைப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

தாம் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மறுசீரமைக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அகுரம்பொடவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் கோடீஸ்வரர்களுக்கும், சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருபவர்களுக்கும் 600 முதல் 700 பில்லியன் வரையில் வரிச்சலுகை வழங்கியமையால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு சதவீதமாகவும், ☞ 8

## ஆயுதப் போராட்டம் நின்றபோதும் எம் விடுதலை வேட்கை தகிக்கிறது

### முன்னாள் வடமாகாண உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



(ந.லோகதயாளன்.)

தமிழர்களின் விடுதலைக்காகவெனத்தொடங்கப்பட்ட ஆயுதப்போராட்டம் முப்பது வருடங்களின் பின் மௌனிக்கப்பட்டபோதும், தமிழர்களின் விடுதலைக்கான பயணம் நினைவேந்தல்களின் மூலமும், ஜனநாயகவழி ஆர்ப்பாட்டங்கள் மூலமும் தொடர்கிறது என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 'போராட்டவடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது' என்ற தியாகி திலீபனின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் ☞ 8

## வரி வசூலிப்பில் கடும் முடிவு எடுக்கவேண்டிய நேரம் இது

### துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவிப்பு

வரி வசூலிக்கும் முறையில்லாதது குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் ☞ 2

## 4 கப்பல் டீசல் கொள்வனவுக்கு அனுமதி

எதிர்வரும் நான்கு மாதகாலத்திற்குள் 4 கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்வதற்கு, முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

2023.11.01 தொடக்கம் ☞ 8

## 2024 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

2024 நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சட்டவரைஞர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள 2024 நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இதற்கமைய, குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப் ☞ 8

## பொருளாதார மைய நிலையமாக இலங்கையை மாற்ற அழைப்பு

### ஜனாதிபதி ரணில் விடுக்கிறார்

இலங்கையை பொருளாதார மைய நிலையமாக மாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 2023 வர்த்தக மத்தியஸ்தம் தொடர்பான மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாற்று பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் ☞ 8

## ஈஸ்டர் குண்டுவெடிப்புகளுடன் ஒருபோதும் ராஜபக்ஷக்களுக்கு தொடர்பே இல்லையாம்

### அடித்துக் கூறுகின்றார் எஸ்.பி.திஸநாயக்க எம்.பி.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. பொதுஜன பெரமுனவுக்கும் அதனுடன் தொடர்பில்லை என பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்பட தொகுப்பில் எந்த விசாரணையும் இல்லாமல், ஆராய்ந்து பார்க்காமல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான குற்றச்சாட்டை கோட்டாபய ராஜபக்ஷ மீது சுமத்த மோசமான முயற்சியை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இந்தத் தாக்குதலுக்கும் ராஜபக்ஷவினருக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த தாக்குதல் தொடர்பாக பல விசாரணைகள் இடம்பெற்றிருக்கின்றன. சர்வதேச விசாரணைகளும் இடம்பெற்றிருக்கின்றன. அதன் பிரகாரம் இந்தத் தாக்குதல் தொடர்பில் பலர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கி இருக்கிறது.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இஸ்லாமிய இராச்சியம் அமைக்கும் சிந்தனைகொண்ட குழுவினாலே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் சஹ்றான் ஹசீமின் ☞ 8

## ஜனாதிபதித் தேர்தலை அரசு நடத்தியேயாக வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

அரசிசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் 13 மாதங்களில் நடத்தப்படவேண்டும். அதில் இருந்து அரசு தப்ப முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்கள் மத்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தவறவிட்டாலும் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அதனால் இப்போது ஜனாதிபதித் தேர்தல் குறித்த அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசின் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போலவே. அனைத்துக் கட்சி ஆட்சி என்ற வகையில் மொட்டு மற்றும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டிருந்தார். அமைச்சுப் பதவியைப் பெற்ற பின்னர் அவர்களில் பலர் தமது கட்சியைக் கழற்றிவிட்டு, ரணிலோடு ஐக்கியமாகி விட்டார்கள் என்கிற குற்றச்சாட்டு உண்டு. மொட்டுக் கட்சிக்குள்ளேயே இந்த அதிருப்தி பலமாக எதிரொலிக்கிறது.

இந்த நிலையில்தான் அமெரிக்கா புறப்படுவதற்கு முன்பாக மொட்டுக் கட்சியின் நிறுவுனர் பஸில் ராஜபக் ஷவைச் சந்தித்துப் பேசினார் ரணில். நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பால் முன்வைக்கப்படும் சட்டமூலங்களுக்கு ஆதரவளிக்கும் நாடாளமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது தொடர்பில் பேசுவதற்காக ரணிலே இந்தத் தடவை பஸிலை அழைத்திருந்தார். வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட பஸில் அமைச்சரவை மாற்றம் குறித்தும் அழுத்தினார். அந்தச் சமயத்தில் அதற்குச் சம்மதித்த ரணில், புதிதாக 4 அமைச்சர்களை நியமிப்பதற்கு இணங்கினார்.

இதனடிப்படையில் பிரச்சினைகளின் நாயகனாக இருக்கும் சுகாதாரத்துறை அமைச்சரை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ரணில் தனது கியூப - அமெரிக்கப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அழைத்து பதவி விலகுமாறு அவருக்கு அறிவுறுத்தினார். அவரது வெற்றிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன சுகாதார அமைச்சராக நியமிக்கப்படப்போகிறார் என்றும் செய்திகள் வெளியாகின. ரணில் நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றம் உடனடியாக நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை.

அதற்குக் காரணம் ரமேஷ் பத்திரன அமைச்சுப் பதவியை ஏற்க மறுத்துவிட்டமைதான். ரமேஷ் பத்திரன தொழில் ரீதியாக ஒரு மருத்துவர். அதனால் சுகாதாரத்துறை அமைச்சுப் பதவியை ஏற்க முடியாது என்று மறுத்துவிட்டார். அவர் இப்படி இந்த அமைச்சுப் பதவியை மறுப்பது இது இரண்டாவது முறை. இதற்கு முன்னர் கோட்டாபய ராஜபக் ஷ ஜனாதிபதியாக இருந்தபோதும் சுகாதாரத்துறை அமைச்சைப் பொறுப்பேற்கும்படி அவரிடம் கேட்கப்பட்டது. ஆனால், அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதையடுத்து அந்தப் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்க ரணில் தரப்பில் ஆலோசிக்கப்படுகின்றது. யாப்பா, மொட்டுக் கட்சியின் ஊடாகவே நாடாளுமன்றத்திற்கு வந்தவர். மக்கள் கிளர்ச்சியை அடுத்து நாடாளுமன்றத்தில் சுயாதீனமானவராகத் தன்னை அறிவித்துக் கொண்டவர்களில் அவரும் ஒருவர். இருந்தாலும் அவர் இப்போது இருப்பது ரணில் அணியில்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ரணிலுக்காக உரு வாக்கத் திட்டமிடப்பட்ட புதிய கூட்டணியை உருவாக்கும் பணியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸாவுடன் கூடச் செயற்படுபவர் யாப்பா. துரதிர்ஸ்டவசமாக இந்தப் புதிய கூட்டணி தற்போதுவரை உருவாக்கப்படாமல் தோல்வியடைந்துள்ளது. அந்தக் கூட்டணி உருவானால் அதன் தலைவராக யாப்பாவை நியமிப்பதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் - ரணில் பக்கம் முற்றிலுமாகச் சாய்திருக்கும் -, யாப்பாவிற்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதை மொட்டக் கட்சியே விரும்பவில்லை. கட்சிக்குள் அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. யாப்பாவுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு மொட்டுக் கட்சித் தலைமையே இணங்கினால்கூட அதனை எதிர்ப்பது என்று கட்சியின் ஏனைய தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் மொட்டுக் கட்சி கொடுத்த அமைச்சர்களுக்கான பட்டியலில் இல்லாத பேர்வழிகளுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், ரணிலுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளில் இறங்குவது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்ததன் பின்னர் செய்தியாளர்களுடன் பேசினார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இந்த ஆட்சி உழைக்கும் மக்களின் வாழ்க்கையை பறிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றது. கடந்த வருடத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்ற 14 நாடுகள் உலகில் உள்ளன. ஆனால் அந்த நாடுகள் எவையும் பொதுமக்களின் எதிர்காலத்துடன் தொடர்புடைய எந்தவிதமான நிதிகளையும் தமது கடன் மறுசீரமைப்புக்களுக்காகப் பயன்படுத்தவில்லை. குறிப்பாக சமூகப் பாதுகாப்பு நிதிகளை அவை பயன்படுத்தவில்லை.

அவ்வாறான நிலையில் இலங்கை மட்டுமே பொதுமக்களின் எதிர்காலப் பாதுகாப்பு நிதியில் கைவைப்பதற்கு முனைகின்றது. இது அரசமைப்பு மீறல் என்பதோடு சாதாரண குடிமகனின் அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடுமாகும் – என்றார்.

மனுத்தாக்கல் செய்யப்படும் சமயத்தில் அங்கிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பல வருடங்களாக வரிகளை கட்டாதிருக்கின்ற பெரு முதலாளிகளிடத்தில் அவற்றை வசூலிக்காது இருக்கின்றது இந்த ஆட்சி. மறுபக்கத்தில் பொதுமக்களின் பணம் சூறையாடப்படுகிறது. அதனை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை ஏதும் இல்லை.

ஆனால், சதாரண அப்பாவி மக்களின் பணத்தில் கைவைத்து அவர்களின் எதிர்கால நம்பிக்கை மீது பாதிப்பை ஏற்படுத்த முனைகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

## வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது. அந்தக் கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. அரசு மற்றும் நாணய நிதியத்திற்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து நாட்டுக்கு அறிவிக்க உள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்த மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. அதன்படி, பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருதல், அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரித்தல், அரச வரி வருமானத்தை அதிகரித்தல் அவசியமாகும்.

கடந்த காலங்களில் 95 சதவீதமாக இருந்த உணவுப் பற்றாக்குறை, தற்போது -5 சதவீதமாகக் குறைந்துள்ளது. பணவீக்கம் 70 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதமாகவும், 20 மில்லியன் டொலர்களாக இருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு, 04 பில்லியன் டொலர்களாகவும் அதிகரித்துள்ளது. எனினும், சர்வதேச நாணய நிதியம் அரச வருமானத்தை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்தியுள்ளது. அதற்கு முதன்மைக் காரணம், அரசின் வருமானத்தில் 90 சதவீதமான வரி மூலம் வசூலிக்கப்படுகின்றமையாகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 1667 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்திடமிருந்து 1217 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்திலிருந்து 217 பில்லியன் ரூபாவும் என்ற வகையில் 3101 பில்லியன் ரூபா வருமானத்தை இலக்கை அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் இதுவரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுமார் 956 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கம் சுமார் 578 பில்லியன் ரூபாவும், மது வரித் திணைக்களம் சுமார் 109 பில்லியன் ரூபாவும், மொத்தமாக, கிட்டத்தட்ட 1643 பில்லியன் ரூபா மாத்திரமே வசூலித்துள்ளன.

சேகரிக்கப்பட்டுள்ள முறைமையின்படி இந்த வருட இறுதிக்குள் சுமார் 2380 பில்லியன் ரூபாவை மாத்திரமே உரிய இலக்கில் இருந்து பெறமுடியும் என அரசு நம்புகிறது. இதனால் 637 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

குறிப்பாக, இந்த வருமானத்தை ஈட்டுவது சாத்தியமற்றதல்ல. எனவே, அரசு எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் ஒரு குழுவாக ஆராய்ந்தோம். அதன்போது அரசுக்கு அதிக வருவாயை வழங்கும் உள்நாட்டு இறைவரி திணைக்களம், சுங்க மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டனர்.

2022ஆம் ஆண்டு இந்த நிறுவனங்கள் உரிய வரியை முறையாக வசூலிக்கத் திட்டங்களை தயாரித்திருந்தால் இந்த வருமானத்தை எட்டியிருக்க முடியும் என்பது அதன்போது தெரியவந்தது.

கடந்த ஆண்டு (2022) தனிநபர் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கோப்புகளில் 10 சதவீதமானவர்கள் மாத்திரமே ஒரு ரூபாவேனும் வரி செலுத்துகின்றனர்.

அரச வரி வருமானத்தை அதிகரிக்க செயற்படாத அதிகாரிகள் குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டும். இந்த நிறுவனங்களில் நடக்கும் முறைகேடுகளை கட்டுப்படுத்தினால், 500 பில்லியன் வருமானத்தை உயர்த்தும் திறன் எம்மிடம் உள்ளது.

இந்த நிறுவனங்களின் திறமையின்மை மற்றும் முறைகேடுகள் காரணமாக அரசு இலங்கைச் சுங்கத்தில் இருந்து வருடமொன்றுக்கு சுமார் 360 பில்லியன் ரூபாவையும், மதுவரித் திணைக்களத்தில் இருந்து வருடத்திற்கு சுமார் 60 பில்லியன் ரூபாவையும் இழந்துள்ளது.

உதாரணமாக, இந்த நாட்டின் மதுபான தொழிற்சாலைகள் ஒவ்வொரு மாதமும் சுமார் 50 மில்லியன் மது போத்தல்களை உற்பத்தி செய்கின்றன. ஆண்டுக்கு 540-600 மில்லியன் மது போத்தல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த உற்பத்தியில் 40 சதவீதமானவை வேறு வழிகளில் வெளியே செல்கின்றன. இதன் ஊடாக அரசுக்கு வரி கிடைப்பதில்லை.

இதனைத் தடுப்பதற்காக 2018இல், பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் முதல் சில மாதங்களில் அரசின் வருமானம் அதிகரித்தாலும், போலி ஸ்டிக்கர்களால் மதுவரித் திணைக்களத்தின் வருமானம் மீண்டும் 40 சதவீதமாக குறைந்துள்ளது. மதுவரித் திணைக்களம் மேற்பார்வைக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு பணிப்புரைகள் விடுக்கப்பட்ட பின்னர், 40,000 இற்கும் மேற்பட்ட போலி மது போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு சில அதிகாரிகளின் திறமையின்மையினால், அரசியல்வாதிகள் மீது மக்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# கூட்டம் புறக்கணிப்பு

(ந.லோகதயாளன்.)

தியாகதீபம் திலீபன் நினைவு தினத்தில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை புறக்கணித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்மிக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளிற்கான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் எவரும் கலந்துகொள்ளாது ஆசனங்கள் வெறுமையாக காட்சியளித்தன.

கூட்டத்தில் மாவட்டச்செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாள்கள், திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பொலிசார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# இந்திய மீனவர் மீது தாக்குதல்



(ந.லோகதயாளன்.)

தமிழ்நாடு, இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து திங்கட்கிழமை மீன் பிடிப்பதற்கான அனுமதி பெற்றுச் சென்ற படகு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். இலங்கை கடற்படையினரே கற்களால் எறிந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று குற்றங்சாட்டப்பட்டுள்ளது.

50க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற சமயம் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த இராமேஸ்வரத்தை சேர்ந்த ஒரு விசைப்படகு மீது கற்கள் கொண்டு தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

இதில் படகில் இருந்த பிராங்கிலின் என்ற மீனவர் படுகாயம் அடைந்தார்.

இவ்வாறு படுகாயமடைந்த மீனவரை சக மீனவர்கள் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சிகிச்சைபெற்று பின்னர் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து படுகாயம் அடைந்த மீனவர்களிடம் இந்தியாவின் மத்திய, மாநில உளவு போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சுவாமி விவேகானந்தர் சிலை திறந்து வைப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

கொட்டகலையில் சுவாமி விவேகானந்தர் திருவுருவச்சிலையை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அதனைத் திறந்து வைத்தார்.

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கொட்டகல டெலிகிளேயர் பாடசாலையில் இந்த உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.அலெக்சாண்டர் தலைமையில் சிலைதிறப்பு விழா திங்கட்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. ஆலயவழிபாட்டின் பின்னர் மட்டக்களப்பில் இருந்து சென்ற ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சிலையைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து மலையக மக்களுக்கு அருளுரை ஆற்றினார்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் சுவாமிகளிடம் ஆசிபெற்றனர்.

# யாழ். பல்கலை துணைவேந்தருடன் பிரான்ஸ் தூதுக் குழு நேற்று சந்திப்பு



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற், கலாசார ஒத்துழைப்புக்கான துணைத் தூதுவர் ஒலிவியா பெலீமியர் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தின் ஊடகத் தொடர்பாடல் அதிகாரி டினுசா இல்லப்பெருமா ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமகால விடயங்கள் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முன்னெடுக்கப்படும் கற்றல் மற்றும் ஆராய்சி செயற்றிட்டங்களின் மீளாய்வு குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது

# சுதந்திரபுரத்தில் பேரெழுச்சியோடு தியாகி திலீபனின் நினைவேந்தல்






















தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று சுதந்திரபுரத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்நிகழ்வுகள்தாயகப்பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் முல்லைத்தீவு-சுதந்திரபுரத்திலும்நேற்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

தாயக அரசியல் செயலணியின் ஏற்பாட்டில் சுதந்திரபுரம், நிறோஜன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றஇந்தநினைவேந்தல்நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றலுடன் தொடங்கியது. அந்த வகையில் பொதுச் சுடரினை முன்னாள் போராளி பார்த்தீபன் மாலினி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டு தியாகதீபம் திலீபனின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர் அஞ்சலியுடன் நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இவற்றையடுத்து சங்கநாதம் புகழ் பேபி ஆசிரியர் மற்றும், நடனமயில் கணபதிப்பிள்ளை கருணாநந்தன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் திலீபனின் தியாகவுணர்வை வெளிப்படுத்தும் நடன நிகழ்வுகள், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அத்தோடு திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்கள் பரிசில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன், நடன நெறியாளர்களும் இதன் போது பொன்னாடைபோர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். அதேவேளை இந்த நினைவேந்த ல் நிகழ்வு இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது, இராணுவத்தினர்குறித்தபகுதியில்ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையையும் அவதானிக்கமுடிந்தது.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வில், முன்னாள்வடமாகாணசபைஉறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூகசெயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர்இளஞ்செழியன், வேலு தியாகராசா, சாம்பசிவம் உதயகுமார், திருநாவுக்கரசு பிரணவன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்வதே முக்கியம்

வரி வசூலிக்கும் முறை இல்லாதது குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரசின் வருமானத்தில் 90 சதவீதம் வரி மூலம் வசூலிக்கப்படுகின்றபோதும் அதனைச் சரிவர வசூலிப்பதற்கு இதுவரை அரசிடம் சரியான ஒரு பொறிமுறையோ திட்டமோ இல்லை என்பதையும் மேற்பார்வைக் குழு சுட்டிக்காட்டுகின்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 1667 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்திடமிருந்து 1217 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்திலிருந்து 217 பில்லியன் ரூபாவும் என்ற வகையில் 3101 பில்லியன் ரூபா வருமானத்தை இலக்கை அரசு எதிர்பார்த்தபோதும், இதுவரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுமார் 956 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கம் சுமார் 578 பில்லியன் ரூபாவும், மது வரித் திணைக்களம் சுமார் 109 பில்லியன் ரூபாவும், மொத்தமாக, கிட்டத்தட்ட 1643 பில்லியன் ரூபா மாத்திரமே வசூலிக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்டுள்ள முறைமையின்படி இந்த வருட இறுதிக்குள் சுமார் 2380 பில்லியன் ரூபாவை மாத்திரமே உரிய இலக்கில் இருந்து பெற முடியும் என அரசு நம்புகிறது. இதனால் 637 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது..

2022ஆம் ஆண்டு இந்த நிறுவனங்கள் உரிய வரியை முறையாக வசூலிக்கத் திட்டங்களை தயாரித்திருந்தால் இந்த வருமானத்தை எட்டியிருக்க முடிந்திருக்கும் என்று மஹிந்தானந்தவே தெரிவிக்கிறார்.

கடந்த ஆண்டு (2022) தனிநபர் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கோப்புகளில் 10 சதவீதமானவர்கள் மாத்திரமே ஒரு ரூபாவேனும் வரி செலுத்துகின்றனர். வரி விதிப்பு உயர்வுக்குப் பிறகு, 10 இலட்சம் புதிய வரிக் கோப்புகள் திறக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்தது. ஆனால் தற்போது, பத்தாயிரம் கோப்புகள் மாத்திரமே புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

அரச வரி வருமானத்தை அதிகரிக்க செயற்படாத அதிகாரிகள் குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டும். இந்த நிறுவனங்களில் நடக்கும் முறைகேடுகளை கட்டுப்படுத்தினால், 500 பில்லியன் வருமானத்தை உயர்த்த முடியும் என்கிறார் மஹிந்தானந்த.

இந்த நிறுவனங்களின் திறமையின்மை மற்றும் முறைகேடுகள் காரணமாக அரசு இலங்கைச் சுங்கத்தில் இருந்து வருடமொன்றுக்கு சுமார் 360 பில்லியன் ரூபாவையும், மதுவரித் திணைக்களத்தில் இருந்து வருடத்திற்கு சுமார் 60 பில்லியன் ரூபாவையும் அரசு இழந்துள்ளது.

இப்படிப் பொருளாதாரத்தை எங்கே சீர்செய்யவேண்டுமோ அங்கே சீர்செய்யாமல் விட்டுவிட்டு ஊழியர் சேம லாப நிதியிலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் கைவைத்து உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்கிற பெயரில் அப்பாவித் தொழிலாளர்களின் எதிர்காலத்தைச் சூனியமாக்குகின்றனர் ஆட்சியாளர்கள்.

அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் வரி வசூலிப்புக்களை ஒழுங்காக்குவதற்கும் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் பொருளாதார மறுசீரமைப்பை ஏற்படுத்துவது இலகுவாகி இருந்திருக்கும். இந்த விடயத்தில் அரசினதும் ஆட்சியாளர்களினதும் நிர்வாகிகளினதும் திறமையின்மை கடைசியில் பாட்டாளி வர்க்கத்தின் வயிற்றில் அடிப்பதாக முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே வலி வசூலிப்பை முறைப்படி துரிதப்படுத்தவும் சீர்ப்படுத்தவும் அரசு முதலில் அக்கறை செலுத்தவேண்டும்.



# அரசு பணியாளர் வெளியேற்றம் ஏற்படுத்தப்போகும் பாதிப்பு!

நடராசா லோகதயாளன்

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அரச நிர்வாக அலுவலகங்களில் இருந்து 133 உத்தியோகத்தர்கள் நீண்ட விடுமுறையிலும் 81 உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டும் வெளியேறியுள்ளனர்.

நாட்டில் நிலவும் அதிக பொருளாதார நெருக்கடி காரணமாக அரச உத்தியோகத்தர்கள் விரும்பினால் 5 வருட விடுமுறை பெற்று வெளிநாடுகளிற்குச் செல்ல முடியும் என அரசு 2022 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்தல் வெளியிட்டது.

இந்த அறிவித்தலைப் பயன்படுத்தி பலர் நாட்டில் இருந்து வெளியேறும் நிலையில் வடக்கில உள்ள மாகாண மற்றும் மத்திய அரசிற்கு உட்பட்ட திணைக்களங்களில் பணியாற்றும் பலரும் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் மட்டும் 6 தரங்களைச் சேரந்த பணியாளர்களில் இருந்து இதுவரை 81 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள் ளனர் என்று வடக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம நிர்வாகச் செயலாளர் அலுவலகம் தெரிவிக்கிறது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 47 பேரும் முகாமைத்துவ உதவியாளர்கள் 21பேரும், அலுவலக உத்தியோகத்தர்கள் 6 பேரும், சாரதிகள் 6 பேரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருவருமாக 81 உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கான விடுமுறையைப் பெற்று வெளயேறியுள்ளனர்.

வெளிநாடு செல்வதற்கு 81 உத்தியோகத்தர்கள் மட்டுமே அனுமதி பெற்றபோதும் 133 உத்தியோகத்தர்கள் 10 வருட விடுமுறையினைப் பெற்றுள்ளனர். அதேநேரம் மேலும் 10 உத்தியோகத்தர்கள் விடுமுறைகளிற்கு விண்ணப்பித்த போதும் அவர்களுக்கு அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கு உட்படாது மத்திய அரசின் கீழ் உள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களில் இருந்தும் வடக்கில் பலர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதேநேரம் மாவட்டச் செயலகங்களிலில் இருந்து வெளிநாடு சென்றவரகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 14 உத்தியோகத்தர்களும், வவுனியாவில் இருந்து 6 பேரும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 12 பேரும் வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு செல்லும் உத்தியோகத்தர்கள் விரைவில் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களோ அல்லது இயலாமை கொண்ட உத்தியோகத்தர்களோ கிடையாது. மிகத் திறமையான ஊழியர்கள் வெளியேறுகின்றனர் என்று அமைச்சர்களே கூறுகின்றனர். இதனால் தற்போது நாட்டில் அரச பணியாளர்கள் நெருக்கடியும் எழும் நிலை ஏற்படும் என்ற அச்சம் நிலவுகின்றது. ஏற்கனவே அரச அலுவலகங்களின் செயற்றிறன் மிக மோசமாக உள்ள நிலையில் திறமையான பணியாளர்களும் இழக்கப்படும் நிலை ஏற்படுமானால் நிலமை இன்னும் மோசமடையும்.

இதற்கு ஓர் உதாரணமாக யாழ்பபாணம் மாவட்டச் செயலகத்தின் பதிவாளர் பிரிவிலே காணி உறுதிகளின் பிரதி எடுப்பதில் இருந்த துரித சேவையான ஒரே நாளில் பிரதியை பெற்றுக்கொள்ளும் சேவை முழுமையாக இழுத்து மூடப்பட்டுவிட்டது. சாதாரண சேவை மட்டுமே இடம்பெறுகின்றது. இந்த ஒரு நாள் சேவை மூடப்பட்டதற்கு துறைசார் அறிவுகொண்ட உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணம் அல்ல. துறை சார் அனுபவம் கொண்ட சிற்றூழியர்கள் அதாவது அலுவலக உதவியாளர்கள் இன்மையே காரணம் என மாவட்டச் செயலகம் கூறுகின்றது.

சிற்றூழியர் இன்மை காரணமாகவே ஒரு மாவட்டத்தின் காணி உறுதி வழங்கும் செயலகத்தின் சேவைகள் குறைக்கப்படுகின்றன என்றால் ஏனைய பணியாளர் வெளியேற்றத்தினால் எந்தளவிற்குப் பாதிப்பு ஏற்படும் என்பதையும் அரச சேவை எந்தளவிற்கு வினைத்திறனற்றதாக மாறும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டியிருக்கிறது.

ஏற்கனவே அரச அலுவலகங்களில் ஒவ்வொரு சிறு சிறு வேலைக்கும் ஒருவர் என்கிற ரீதியில் கடமை ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்ததால், அதற்குப் பழக்கப்பட்ட பணியாளர்கள் இப்போது ஆட்கள் இல்லை என்பதையே காரணமாகக் கூறி பணிகளைத் தள்ளிப்போடும் நிலை ஏற்படுகின்றது. அதனை நிவர்த்திப்பதாயின், இருக்கும் பணியாளர்களின் வினைத்திறனை மேம்படுத்தவும், அவர்களைப் பல பணிகள் செய்பவர்களாக மேம்படுத்தவும் வேண்டும். ஆனால் அதைச் செய்வதற்கும் அரசிடம் பணம் இல்லை.

இந்த நிலையில் ஆளணிப் பற்றாக்குறையால் துறைசார் உத்தியோகத்தர்கள் அதுவும் நீண்ட அனுபவம்கொண்டோர் நாட்டைவிட்டு வெளயேறுவதனால் ஏற்படும் அபாயத்திற்கான சங்கு தற்போதே ஊதப்படுகின்றது.

இதேநேரம் வைத்தியர்கள், பொறியிலாளர்களும் தொடர்ச்சியாக வெளயேறுகின்றனர். பல்கலைக்கழகம் சார்ந்தவர்களும் வெளியேறி வருகின்றனர். இருந்தபோதும் இதனை தடுக்கவோ அல்லது மாற்றுவழி காணவோ வழியின்றி அரசும் திணறுகின்றது.

**அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 47 பேரும் முகாமைத் துவ உதவியாளர்கள் 21 பேரும், அலுவலக உத்தியோகத்தர்கள் 6 பேரும், சாரதிகள் 6 பேரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருவருமாக 81 உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கான விடுமுறையைப் பெற்று வெளயேறியுள்ளனர்.**

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு ஆளுநர் பற்றி பொய்பேசி இம்ரான் எம்.பி. அரசியல் நாடகம்

## முன்னாள் தவிசாளர் முபாரக் தெரிவிப்பு

-அபு அலா -



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும், கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொருசெயலகங்களிளும் முஸ்லிம்களுக்கான பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும்உண்மைக்குபுறம்பான அறிக்கையை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் வெளியிட்டிருந்தார். இது முற்றிலும் பொய் என்று குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்எம்.முபாரக்தெரிவித்தார்.

இதுதொடர்பில், நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுக்கான உயர் பதவிகள் ஆளுநரால் வழங்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றஉறுப்பினர் இம்ரானின் அறிக்கையால் முஸ்லிம் சமூகத்திற்குள் ஆளுநர் மீது தவறான அபிப்பிராயம் எழுந்தமை பெரும் கவலைக்குரிய விடயம். கடந்த வாரம் ஆயிரக்கணக்கான மீனவர்கள் அரசால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைக்கு எதிர்ப்பு தெரிவித்து மீன்பிடி திணைக்களத்திற்கு முன்னால் வீதி மறியலில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோரை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், சந்தித்து அப்பிரச்சினை குறித்து கலந்துரையாடினார்.

அரசால் அனுமதிக்கப்பட்ட அளவீடைக் கொண்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லையெனவும், அரசால் தடைசெய்யப்பட்ட அளவீடு, அங்குலங்களைக் கொண்ட வலைகளை பயன்படுத்த வேண்டாமெனவும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். இதனை அடுத்து மீனவர்களால் போராட்டம் கைவிடப்பட்டது.

மீனவர் பிரச்சினை குறித்து ஆளுநரால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிந்துகொள்ள முயற்சிக்காத நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், பிழையான அறிக்கைகளை வெளியிட்டு தன்னுடையஅரசியல்பிளைப்பை நடத்த பெரும் நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கிவிட்டார்.

இம்ரான் மகரூப்பின் இந்தப் பிழையான அறிக்கை மூலம் மக்களை பிழையாக திசைதிருப்பும் வகையில் உள்ளது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டநாடாளுமன்ற உறுப்பினரான இம்ரான் மகரூப் இவ்வாறு சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடுவது முற்றிலும் தவறு - என்றார்.



# பிரமித்த பண்டார தென்னகோனுக்கு 'பொப்பி மலர்' அணிவித்து கௌரவம்

இலங்கையின் ஓய்வு பெற்ற படை வீரர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனுக்கு 'பொப்பி மலர்' அணிவித்தனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் போது மேற்படி சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) உபுல் பெரேரா தலைமையிலான குழுவினர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தென்னகோனை சந்தித்ததுடன் பொப்பி மலரை அணிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் இலங்கையின் ஓய்வுபெற்ற படை வீரர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரிக்கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இலங்கையின் ஓய்வு பெற்ற படைவீரர்கள் சங்கம் உயிர்நீத்த படைவீரர்களை நினைவுகூரும் வகையில் பொப்பி மலர் தினத்தை ஆண்டுதோறும் அனுஷ்டிக்கிறது.

'பொப்பி மலர் தினம்' முதலாம் உலகப் போரின் போது உயிர் தியாகம் செய்த ஆயுதப் படை வீரர்களை நினைவுகூரும் வகையில் பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# தங்காலை கடலில் மூழ்கி வெளிநாட்டவர் இறப்பு

தங்காலைக் கடலில் தனது ஆண் நண்பனுடன் குளித்த போலந்து நாட்டைச் சேர்ந்த யுவதியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த இரு போலந்து பிரஜைகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை தங்காலை கடலில் குளிக்க சென்ற வேளை பலத்த கடல் அலைகளால் அவர்கள் இருவரும் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் எனவும், பின்னர் அவர்கள் இருவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு தங்காலை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 22 வயதுடைய போலந்து யுவதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கிளிநொச்சியில் இளைஞர் கொலை

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலைசெய்யப்பட்டசம்பவம் கிளிநொச்சியில்பதிவாகியுள்ளது. குறித்தசம்பவம்திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும், உயிரிழந்தவர் புஸ்பராசா தினேஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலே இக்கொலைக்குக் காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (05)

## தென்கிழக்குப் பல்கலைக்கழக

# ஆசிரியர்கள் சங்கத்திற்கு புதிய தலைவர் தெரிவு



இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான புதிய தலைவராக பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் கோட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற நிகழ்விலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

புதிய தலைவருக்கான போட்டியில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கணிசமான வாக்குகளைப் பெற்று பேராசிரியர் முஸ்தபா அச்சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முதற் தொகுதிமாணவர்களுள் ஒருவராகிய பேராசிரியர் முஸ்தபா கடந்த காலங்களிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரி யர் சங்கத்தின் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர்.

இதன்போது ஆசிரியர்களின் நலன்களை வெற்றிகொள்வதில்பேராசிரியர்முஸ்தபா குறிப்பிடும்படியான பங்களிப்புக்களை நல்கியிருந்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ துறையின் தலைவராகிய பேராசிரியர் முஸ்தபா மீண்டும் அத்தகைய பொறுப்புமிக்கபதவிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றமை ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப்பெற்றுள்ளது. (05)





# ஹெரோயின் போதையுடன் தாயும் மகனும் கைதாகினர்

## பிலியந்தலயில் சம்பவம்

பிலியந்தலை பிரதேசத்தில் ஹெரோயின்போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 39 வயதுடைய தாயும் அவரது 23 வயதுடைய மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதியில் பயணித்த மோட்டார்சைக்கிளை பொலிஸார் சோதனையிட்ட போது குறித்த இளைஞனின் நடத்தை மீது ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசாரணையின் போது, கைதுசெய்யப்பட்ட தாயிடமிருந்து 14 கிராம் 910 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அவர்களது வீட்டில் சோதனை நடத்தியபோது மேலும் பல போதைப்பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள் டுபாய் நாட்டில் தலைமறைவாகியுள்ள நீலங்க என்ற பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியுடன் போதைப்பொருள்வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர் எனப் பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கட்டாக்காலிகளால் மக்கள் பெரும் அவதி

## கல்முனையில் இந்த நிலமை

கல்முனையில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்முனை – நற்பிட்டிமுனை பிரதான வீதி, கல்முனை -பாண்டிருப்பு பிரதான வீதி மற்றும் கல்முனை -சாய்ந்தமருது செல்லும் முக்கிய பிரதான வீதிகளிலேயே பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வீதியில் பயணம் செய்வோர் நாய்களின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் எனவும், தொடர்ச்சியாக அப்பகுதிகளில் விபத்துக்கள் சம்பவித்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயங்களில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, கட்டாக்காலி நாய்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(05)

# 15 நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழப்பு

## ஹர்ச டி சில்வா சுட்டிக்காட்டு

ஈஸ்டர் தாக்குதலில் சுமார் 15 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் உயிரிழந்துள்ளனர். எனவே சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்' என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில்இடம்பெற்றஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

உயிர்த்த ஞாயிறு தொடர்பான உண்மைகளை அறிந்துகொள்வதில் ஆளும் கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் எதிர்க்கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் கொள்கையிலேயே இந்த நாட்டில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அதனால் இந்த உண்மைகளை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இந்தத் தாக்குதலால் சுமார் 15 நாடுகளின் பிரஜைகள் உயிரிழந்திருக்கின்றார்கள். ஆகவே சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவருக்கும் பொதுவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எதிர்கட்சியினர் இராணுவத்தினருக்குசேறுபூசநினைக்கின்றார்கள் என்று பலரும் கூறுகின்றார்கள். அவ்வாறு எதுவும் இல்லை.

கடந்த பல வருடங்களாக நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவுக்கு அருகில் தான் அமர்கின்றேன். தனிப்பட்ட ரீதியிலும் அவர் எனக்கு பல விடயங்களைக் கூறியிருக்கின்றார்.

வருடக்கணக்காக இடம்பெற்ற யுத்தத்தில் போராடி முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை குறை சொல்வதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை.

ஆனாலும் சில நபர்கள் குறித்து சில கேள்விகள் எழுந்துள்ளன. ஆகவே இது தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரிய தேவை ஒன்று இருக்கின்றது. – இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# சமூக வலைத் தளங்களை கட்டுப்படுத்துவது குறித்த எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டில் உண்மையில்லை

## அடியோடு மறுக்கிறார் ஆஷு மாரசிங்க



சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. அனைத்துத் தரப்பினரதும் ஆலோசனைகளைப்பெற்றேநிகழ்நிலைகாப்புசட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்தயாரிக்கப்பட்டுள்ளதுஎன ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெளிநாட்டுக்கொள்கைக்கு தற்போது பலன் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதி மேற்கொண்டு சென்ற வெளிநாடுகளில் அங்குள்ள தலைவர்கள் ஜனாதிபதி முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளதுடன் நாட்டுக்கு உதவி செய்யவும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

கியுபாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு இடம்பெற்ற மாநாட்டில்பிரதான உரைநிகழ்த்தக் கிடைத்தமை எமக்கு பெரும் கௌரவமாகும். கியுபா சோசலிச நாடாகும். அவ்வாறு இருந்தும் எமது நாட்டுத் தலைவருக்கும் அந்த மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்த கிடைத்தமை எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை எந்த நாட்டையும் சார்த்ததாக இல்லை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதேபோன்று அடுத்ததாக ஜனாதிபதி ஜேர்மன் நாட்டுக்குச் செல்ல தயாராக வருகிறார். அங்கு அந்த நாட்டு ஜனாதிபதி உட்பட தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாட இருக்கிறார். இதன்போது நாட்டுக்கு தேவையான உதவிகளையும் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கிறார். இவ்வாறு வெளிநாட்டு தலைவர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுடன் எமது தேவைகளைச் சொல்ல முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க என்பதுயாரும்அறிந்தவிடயமாகும்.

அத்துடன் உலக அரசியலுடன் இணைந்து செல்லக்கூடிய ஒரு தலைவர் ரணில் விக்ரமசிங்கவைத் தவிர வேறு யாரும் இலங்கையில் இல்லை. அதனால் அரசியல் அனுபவம் உலக நாடுகளுடன் பேச்சுகளை மேற்கொள்ள முடியுமான இலங்கையில் இருக்கும் ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆவார். அதனால் அவர் ஊடாகவே எமது நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மேலும் நாட்டை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் சர்வதேச உதவிகள் கிடைக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதனைத் தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் சில பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றன.

குறிப்பாக சமூகவலைத்தளங்களை அடக்கி, அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களைப் பகிர்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நிகழ்நிலை காப்பு சட்டமூலம் ஊடாக நடவடிக்கை எடுத்து வருவதாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அவர்களின் கருத்துக்களில் எந்த உண்மையும் இல்லை. மக்களை அரசாங்கத்துக்குஎதிராகத் திசை திருப்பவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

சமூக வலைத்தளங்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்துக்கு எந்தத் தேவையும் இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது. ஆனால் சமூகவலைத்தலங்கள் ஊடாக சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறுவது, இனங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தூண்டும் விடயங்களைப் பகிர்வதைத் தடுப்பதற்கு முடியுமான ஒழுங்குவிதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் சமூகவலைத்தளங்களை அடக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராகவும் சிலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத்திருத்தவேண்டும் என்ற கோரிக்கைக்கமையவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமூலங்கள் தயாரிக்கப்பட முன்னர் இதுதொடர்பாக அனைத்து தரப்பினர்களதும் ஆலோசனைகள் பெறப்பட்டிருக்கின்றன. அந்த ஆலோசனைகளுக்கமையவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. – என்றார். (05)

## வரி ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

களால் குற்றம் சுமத்தப்படுவதாக நாம் தொடர்ந்து கூறுகின்றோம். எனவே, இந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க முறையான திட்டம் தயாரிக்கப்பட்டால், அரச வருமானத்தை அதிகரிக்க முடியும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மாத்திரம் 904 பில்லியன் ரூபா வரிகளை அறவிட வேண்டியுள்ளது. அரசுக்கு வரி செலுத்தாமல் நான்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை மாத்திரமே ஆகும். அந்த 4 மேன்முறையீடுகளை ஆய்வு செய்ய 15 ஆண்டுகள் செல்லும். அப்படியானால், இந்நாட்டு மக்கள் எவ்வாறு வரி செலுத்த முடியும்? இதன் காரணமாக 904 பில்லியன் ரூபாவை வசூலிப்பது 15 ஆண்டுகளாக தாமதமாகியுள்ளது.

எனவே, இந்த நிறுவனங்களை கண்காணிக்கவும், ஒழுங்குபடுத்தவும் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழு என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளோம். வரி விதிப்பு உயர்வுக்குப் பிறகு, 10 இலட்சம் புதிய வரிக் கோப்புகள் திறக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்தது. ஆனால் தற்போது, பத்தாயிரம் கோப்புகள் மாத்திரமே புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

அரச வருமானம் அதிகரிப்பதை நாம் காணவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கவனம் செலுத்தாத பிரதான நிறுவனங்களும் வர்த்தகர்களும் இந்நாட்டில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அரசுக்கு வரி செலுத்துவதில்லை. உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திடம் இவற்றைக் கவனிப்பதற்கான உரிய வேலைத்திட்டமும் இல்லை.

நாட்டு மக்களுக்கு மானியங்கள் வழங்குதல், அபிவிருத்தி நடவடிக்கைகள், அரச ஊழியர்களின் சம்பளம் வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களும் அரச வரி வருமானத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. வரி வருமானத்தை அதிகரிப்பது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மீண்டும் சிந்திக்க வேண்டும்.

வரி வசூலிக்கும் முறை இல்லாதது குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது - என்றார்.

## 2024.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டுக்கான நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஒக்டோபர் இரண்டாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நவம்பர் 13ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்படும் என்றும் இராஜாங்க நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அத்துடன், வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 21 ஆம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளதோடு மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் இராஜாங்க நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேலும் தெரிவித்தார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளாகக் கண்டறியப் பட்டுள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள கடன் முகாமைத்துவ நிறுவனத்தை நிறுவுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியன தொழிநுட்ப ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன. குறித்த பங்காளர்களுடன் கலந்துரையாடிய பின்னர், கடன் முகாமைத்துவ மறுசீரமைப்புத் திட்டம், கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் சட்டவரையறை போன்றன தற்போது திட்டமிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, கடன் முகாமைத்துவ சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக மீண்டும் எங்கிருந்தோ நாகப்பாம்பு ஒன்று தோன்றக்கூடும்.

மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்களை கொண்டு வர அரசு தயாராகி வருகிறது. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது.

மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ளனர். அதற்கான தீர்வுகளை அரசு முன்மொழியவில்லை. பொருளாதாரத்தை பலமாக்கும் எந்தவொரு திட்டமும் அரசுக்கு இல்லை.

13 மாதங்களில் மக்கள் முன் இந்த ஆட்சி சென்றேயாகவேண்டும். அப்போது மக்கள் உரிய பதிலை அளிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச வருமானம் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும் குறைவடைந்து இறுதியில் நாடு அதலபாதாளத்திற்குச் சென்றது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினைச் செய்கின்ற போது உள்நாட்டு முறிகள், தனியார் கடன்கள், தனியார் கடன் வழங்குநர்கள், வங்கி கட்டமைப்பு ஆகியன ஓரங்கட்டப்பட்டு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றைக் கொள்ளையடிப்பதற்கு ஆட்சியாளர்கள் முனைகின்றார்கள்.

நாட்டைப் பொருளாதார ரீதியாக மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு அவசியம். ஆனால் அது ஆட்சியாளர்களின் வசதிக்காக அமையக்கூடாது. நாட்டிலுள்ள 225 இலட்சம் மக்களின் எதிர்காலப் பாதுகாப்புக்காகவே சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு அவசியமாக இருக்க வேண்டும்.

ஆகவே, சர்வதேச நாணய நிதியம் சம்பந்தமான விடயத்தில் எமது ஆட்சி அவசரமான தீர்மானங்களை எடுக்காது என்பதோடு ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகள் மறுசீரமைக்கப்படும் என்றும் உறுதியாகத் தெரிவிக்கின்றேன - என்றார்.

## பொருளாதார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியஸ்தம் உள்ளிட்ட இரு துறைகளிலும் இலங்கை பெருமளவான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதே தற்போதைய பிரச்சினையாகும். நாம் முதலில் இந்தச் செயன்முறைக்கு எவ்வாறு எம்மை வடிவமைத்துக்கொள்வது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

அது தொடர்பில் எமக்கு கலாசார ரீதியான மாற்றம் அவசியம். குறுகிய காலத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய வகையில் அந்த மாற்றங்கள் அமைய வேண்டும். அதேபோல் நாம் பழமையான நீதிமன்ற கட்டமைப்புடன் இணைந்துள்ளமை எமக்கு சவாலான விடயமாகும்.

நாம் இலங்கையை பொருளாதார மைய நிலையமாக மாற்றியமைக்கவேண்டும். கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பில் தேவையான சட்ட ஏற்பாடுகளுடன் துறைமுக நகரத்தை 'கொழும்பு நிதி வலயமாக' மாற்றுவதற்கு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

அந்தச் சட்டத்தை உருவாக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவடையும். அடுத்த படியாக முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கு மாறாக பொருளாதார ஆணைக்குழுவொன்றை நிறுவவேண்டும் என்பதோடு, மேற்படி விடயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு அந்த ஆணைக்குழுவே தீர்வுகளை வழங்கும்.

நாம் பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்குச் செல்லவுள்ளோம். சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தம் தொடர்பிலான பேச்சுக்கள் நிறைவை எட்டியுள்ளன. மேம்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்று தொடர்பில் இந்தியாவுடனும் கலந்தாலோசித்துள்ளோம்.

பங்களாதேஷுடனும் பேச்சு தொடங்கியுள்ளது. அதற்கு மேலதிகமாக பிராந்தியத்தின் பரந்த பொருளாதார கூட்டிணைவான ஈஎக்ஸ்ஈபி (EXEP) அமைப்பினுள் இணைந்துகொள்ள எதிர்பார்த்துள்ளோம். உலகின் வலுவான பொருளாதாரச் சமூகம் அதற்குள் இருக்கின்றது. அதனால் எமக்கு மாற்று பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல் இலங்கையை பொருளாதார கேந்திர நிலையமாக உறுதிப்படுத்த வேண்டும். சிங்கப்பூரை போன்ற அபிவிருத்தியை இலங்கையில் ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். அதன்போது சிங்கப்பூருக்கு நிகராக எமது செலவீனங்கள் குறையவேண்டும். அதனால் சிங்கப்பூருடன் போட்டியிடும் இயலுமையும் எமக்கு கிட்டும். அந்த இடைவெளியை குறைத்துக்கொள்ள வேண்டுமெனில் எமது பயணத்தை துரிதப்படுத்த வேண்டும்.

அடுத்ததாக, நாட்டின் சட்டத்தரணிகளும் ஏனைய நீதித்துறை சார்ந்தவர்களும் மாற்றுச் செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்கவேண்டும். இலங்கை உங்களுக்கான சந்தையல்ல, இலங்கைக்கு வெளியிலேயே உங்களுக்கான மிகப்பெரிய சந்தை வாயப்பு உள்ளது. இந்த துறை மாத்திரமின்றி புதிய துறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, புளொக் செயின் மற்றும் மருத்துவத் துறை உள்ளிட்ட அபிவிருத்தி கண்டுவரும் துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். அதனை செய்யும் பட்சத்தில் நாம் பொருளாதார மைய நிலையமாக மாற முடியும். நாம் தாமதமடைந்தால் அந்த வாய்ப்பு மற்றுமொருவருக்கு கிட்டும்.

காலநிலை பேரிடர்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது, நாம் பெரும் அர்பணிப்புக்களை செய்து வருகிறோம். பசுமை ஹைட்ரிஜன், பச்சை அமோனியா மற்றும் காற்றின் மூலம் 60 கிகாவோட்மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். சிலர் 40 கிகாவோட்களை உற்பத்திச் செய்ய முடியும் என்றும் கூறுகின்றனர்.

அது தொடர்பிலான வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு அனைத்து புதிய துறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்படி துறைகளில் கல்வி, நிபுணத்துவ தெரிவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் மேம்படுத்தல்களுக்கு அவசியமான தேவைப்பாடுகளை பெற்றுக்கொடுக்க தயாராகவுள்ளோம். இலங்கையை செயல்திறன் மிக்க தூரநோக்குடன் கூடிய சட்ட சூழலை கொண்ட நாடாக மாற்றியமைப்பதற்கான பயணத்தில் இணைந்து கொள்ளுங்கள் - என்றார்.

## 4 கப்பல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024.02.29 வரைக்கும் தொடர்ந்துவரும் நான்கு மாதகாலத்திற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 04 கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக நீண்டகால ஒப்பந்த முறையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்காக 5 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு இதனை வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

## இன்போடெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் 'டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக மாநாடு தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தின் தலைமையில் ஜனாதிபதி ஊடக மையத்தில நேற்று நடைபெற்றது.

இக்கண்காட்சி இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், டிஜிட்டல் பொருளாதாரம், இணைய இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல், டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், பாதுகாப்பான டிஜிட்டல் கட்டமைப்புகள் மற்றும் தீர்வுகளை பாதுகாத்தல், பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு இந்த கண்காட்சி சிறந்த வாய்ப்பை வழங்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கியுள்ளதாகவும், இதனால் வினைத்திறன் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், 2030 ஆம் ஆண்டுக்குள் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அரச வேலைத்திட்டத்தை வெற்றிகொள்ளும் நோக்குடன் இன்போடெல் தகவல் தொழில்நுட்ப கண்காட்சி' ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பில் அவர் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் சபைக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கை தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் சபையின் தலைவர் இந்திக்க டி சொய்சா, 2030 ஆம் ஆண்டளவில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரச வருமானத்திற்கு அளிக்க எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த கண்காட்சியானது டிஜிட்டல் புத்தாக்க சூழலை உருவாக்குவதோடு, டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும், இந்த நாட்டில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் உதவும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கண்காட்சிக்கான அனுசரணை காசோலைகளும் இதன்போது கையளிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) எம்.பி.என்.எம்.விக்ரமசிங்க, ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் இன்போடெல் ஞானம் செல்லத்துரை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஈஸ்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய தௌஹீத் ஜமாத் இணைந்துகொண்டிருந்தது. சஹ்ரானுக்கு வழிகாட்டியது தற்போது சிறையில் இருக்கும் நவ்பர் மௌலவி என்ற நபராவார். இந்நிலையிலேயே 2014இல் ஐஎஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் உலக முஸ்லிம் இராச்சியம் என்ற சிந்தனையை அறிமுகப்படுத்தினார்.

எமது நாட்டில் இந்தத் தாக்குதல் 2019இல் இடம்பெறுவதற்கு முன்னர் 11 சம்பவங்கள் இடம்பெற்றன. நல்லாட்சி அரசின் காலத்திலேயே அவை இடம்பெற்றிருக்கின்றன. இந்த சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் இந்திய புலனாய்வு அதிகாரி ஒருவர் சஹ்ரானுடன் தொடர்புகொண்டு ஐ.எஸ். தொடர்பாக பல தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்தத்தகவல்கள் மூலமே தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் இந்தியா எமது பாதுகாப்பு பிரிவுக்கு தகவல் வழங்கி இருந்தது. ஆனால் எமது பாதுகாப்புச் சபையில் இருந்த குழப்ப நிலை காரணமாக இந்த இரகசிய தகவலை சரியான முறையில் ஆராயாமல் விட்டுவிட்டனர். இதனாலேயே இந்தத் தாக்குதலைத் தடுக்க முடியாமல் போயிருக்கிறது.

அதனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் கோட்டபாய ராஜபக் ஷ, மஹிந்த ராஜபக் ஷ மற்றும் பொதுஜனபெரமுன கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்திய புலனாய்வு பிரிவு தகவல் வழக்கியும் எமக்கு அதனை தடுக்க முடியாமல் போயிருக்கிறது.

அத்துடன் அபூஹிந் என்பது இந்திய புலனாய்வுப் பிரிவு சஹ்ரான் மற்றும் சிலருடன் கலந்துரையாடப் பயன்படுத்திய சொல். அதேபோன்றே சொனிக் சொனிக் வார்த்தையும். எனவே இந்தத் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசில் இருந்த அனைவரும் பொறுப்பு கூறவேண்டும். நானும் அந்த அரசாங்கத்தில் இருந்தவன். என்றாலும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறேன் - என்றார்.

## ஆயுதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு - சுதந்திரபுரம் சந்தி வளாகத்தில் இடம்பெற்ற நிலையில், அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

ஒரு காலத்தில் அகிம்சை என்றால், அது மகாத்மாகாந்தி என இந்தியா மார்தட்டிக் கொண்டிருந்தது. அதே இந்தியாவின் அடக்குமுறைகளைப் பொறுத்துக்கொண்டு, இந்தியா ஏதாவது தீர்வுகளைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்துடன், தியாக தீபம் திலீபன் எமக்காக, தலைவரின் சிந்தனைக்கேற்ப ஓர் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து தன்னுயிரைத் தியாகம் செய்தார்.

இவ்வாறான சூழலில் நாம் தியாகதீபத்தினுடைய 36 ஆவது ஆண்டு நினைவேந்தலை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது அடுத்த தலைமுறையினர் பலரும் தாமாக முன்வந்து தியாக தீபம் திலீபனை நினைவேந்துவதையும், அவருக்கான அஞ்சலிகளைச் செலுத்துவதையும் காணும்போது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

தியாக தீபம் திலீபன் பட்டினிப் போராட்டம் நடத்தியபோது, பேசமுடியாத நிலையில் அவரால் சில வசனங்களை எழுதப்பட்டன.

நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும், முழு திருப்தியுடனும்தான் தழுவிக்கொள்கின்றேன். என் தலைவனின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றோ ஓர்நாள் எம் இலட்சியத்தினை நிறைவேற்றியே தீரும். எம் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில், அவர்கள் மீது கொண்ட தாழாத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவிற்காக நான் 651ஆவது விடுதலைப் புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கின்றேன்.' என எழுதினார்.

இவ்வாறாக எமக்கான விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் கோரிக்கைகளை முன்வைத்து, நீர், உணவு ஏதுமின்றி நாளாந்தம் தனது உடலினை உருக்கி எமக்காக உயிர்நீத்தார்.

இவ்வாறு அகிம்சை வழிப்போராட்டத்தினை முன்னெடுத்ததன் ஊடாக இங்கு தமிழர்களாகிய நாம் விடுதலைக்காக போராடிவருகின்றோம் என்பதை அறவழியில் உலகறியச் செய்தார்.

குறிப்பாக கடந்தகாலத்தில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்திலே இலங்கை அரசு பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் என ஒப்பந்தங்களை மேற்கொண்டு தமிழர்களை ஏமாற்றிவந்தது.

அதனைத் தொடர்ந்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அதிலும் தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே இருக்கின்றோம் - என்றார்.

# மேலும் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நடவடிக்கை



கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கிழக்கில் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்க மாகாண பொது சேவை ஆணைக்குழு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்தில் 633 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந் நிலையில், தற்போது 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவும், கல்வித் துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும் இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## அந்தரங்க விடயங்களை நேரலையாக வெளியிட்ட இளம் தம்பதியினர் கைது

இளம் தம்பதியர் தமது அந்தரங்க விடயங்களை நேரலையாக வெளியிட்டதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருமணமான இளம் தம்பதியர் தமது அந்தரங்க விடயங்களை நேரலையாக இணையத்தளத்தில் பகிர்ந்தமைக்காகவே கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப் பட்டவர்கள் 23 வயதுடைய பெண்ணும் 25 வயதுடைய ஆணும் ஆவர்.

16 வயது முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களை நோக்காகக் கொண்டு இவர்கள் இருவரும் தங்கள் அந்தரங்க விடயங்களை நேரலையில் காணொளிகளாகப் பகிர்ந்துள்ளனர்.

குறித்த இருவரையும் கைதுசெய்துள்ள கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டுள்ள நிலையில், கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்கள் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (05)

## தினேஸ் சாப்டரின் உடலை ஒப்படைக்குமாறு உத்தரவு

மர்மமான முறையில் உயிரிழந்த வர்த்தகர் தினேஸ் சாப்டரின் உடலை அவரது குடும்பத்தினரிடம் கையளிக்குமாறு சிஐடியினருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரேதப்பரிசோதனைகள் முடிவடைந்துள்ளதால் தினேஸ் சாப்டரின் உடலை அவரது குடும்பத்தினரிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகர் தினேஸ்சாப்டரின் மரணம் குறித்த மர்மம் இன்னமும் விலகாத நிலையில் மே 25 ஆம் திகதி நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நீதித்துறையினர் பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் தினேஸ்சாப்டரின் உடல் மீண்டும் எடுக்கப்பட்டது.

வர்த்தகர் தினேஸ்சாப்டர் கடந்த வருடம் டிசெம்பர் 15 ஆம் திகதி பொரளை கனத்தையில் அவரின் காருக்குள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார் - மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்தார். (05)

## பள்ளத்தாக்கில் விழுந்து இரண்டு பேர் படுகாயம்

மடுல்சீமை எலமான் பகுதியில் அமைந்துள்ள சிறிய உலக முடிவு பகுதிக்கு அருகில், பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மது அருந்தி கொண்டிருந்த ஐவர் அடங்கிய குழுவினரில், இருவர் பள்ளத்தாக்கில் வழுக்கி விழுந்து காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை தனது 25 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்காக மடுல்சீமை எலமான் சிறிய உலக முடிவு பகுதிக்கு அருகில் சானுவ பகுதியில் தனது நண்பர்கள் ஐவர் சகிதம் மது அருந்திக் கொண்டிருந்த வேளை 25 வயது பிறந்த நாளை கொண்டாடும் நபர் கற்பாறையில் இருந்து வழுக்கி விழுந்துள்ளார்.

அவரைக் காப்பாற்ற சென்ற மற்றைய நபரும் விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் 25 வயதுடைய பசறை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷவிடம் வினவிய போது ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 8.30 மணியளவில் பதுளை வந்ததாகவும் அதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையிலேயே சேர்க்கப்பட்டார் எனவும் மற்றையவர் சிறு காயங்களுக்கு உள்ளாகி உள்ளார் எனவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர் 27, 28, 29
மாலை 4.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை
உலக சுற்றுலா தினம் 2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing JAFFNA
TILKO JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# நான் அரசமைப்பை மீறியிருந்தால் நீதிமன்றத்தை நாடி விசாரிக்கலாம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

வெளிநாட்டுகடன்களைமீள செலுத்த முடியாது என்று அரசு கூறிய விடயத்தில் அரசமைப்பு மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பாக நீதி மன்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி வெளிநாட்டு கடன்களை மீள செலுத்த முடியாது என்று அரசாங்கம் கூறும் போது நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவை அரசமைப்பை மீறி சில விடயங்களை செய்ததாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள்.

நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அரசியல் வாதிகளின்வீடுகளுக்குதீவைக் கப்பட்டதும் இதனால்தான் என்று கூறினார்கள்.

என்னுடைய கருத்தின்படி இந்த நாட்டிலுள்ள அதிகாரியோ அமைச்சரோ அல்லது இராஜாங்க அமைச்சரோ அரசமைப்பைமீறுவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உரிய அதிகாரிகளின் கடமை மற்றும் உரிமை.

கடனை மீள செலுத்த முடியாது என்று கூறியதில் அரசமைப்பு மீறல்கள் இடம் பெற்றிருந்தால் அதற்கான நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பகிரங்கமாக கூறுகின்றேன். நிதி அமைச்சு என்ற ரீதியிலும் மத்திய வங்கி என்ற ரீதியிலும் அதற்கான முழு ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கின்றோம்' என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நிந்தவூர் கோட்டத்துக்கு கல்வி அதிகாரி நியமனம்







கல்முனை கல்வி வலய, நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம்.சாஜித் நேற்று(செவ்வாய்க்கிழமை) நிந்தவூர் கோட்டக்கல்வி பணிமனையில் வைத்து ஓய்வு பெற்று செல்லும் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிப்தீன் அவர்களிடமிருந்து தமது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள் முன்னிலையில் யூ.எல்.எம். சாஜித் தனது கடமைகளைப் பெறுப்பேற்று கொண்டார்.

கல்முனை கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக்கல்வி பணிப்பாளராகக் கடந்த பல வருடங்களாகக் கடமையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான சாஜித் அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அர்ப்பணிப்புடன் கடந்த காலங்களில் சேவை-யாற்றிய முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி விட்ட இடத்திலிருந்து சிறப்பாக செய்யவேண்டிய பொறுப்பு புதிய கோட்டக்கல்வி அதிகாரி சாஜித்துக்கு இருப்பதாகவும், கடந்த காலங்களில் அவர் திறமையாக செயற்பட்டு வலய மாணவர்களை தேசிய ரீதியாக பிரகாசிக்க செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிகாரி என்றவகையில் அவர் தன்னுடைய கோட்டத்தை முன்மாதிரியான கோட்டமாக உருவாக்க அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயலாற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் இங்கு ஆசியுரை நிகழ்த்திய கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தனது உரையில் தெரிவித்தார்.

மாலைஅணிவித்துஅழைத்துவரப்பட்ட முன்னாள், இந்நாள் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு கல்முனை வலயக்கல்வி அலுவலக உயர் அதிகாரிகள் தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (05)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரினால் முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு





சுன்னானம் லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர், பிராந்தியத் தலைவர் வருகைகள் திங்கட்கிழமை கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ் தலைமையில் கந்தரோடையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வருகைதந்த வலயத் தலைவர் லயன் க.டினேஸ், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ் ஆகியோர் கந்தரோடை கற்பக்குணை கலைமதி முன்பள்ளி மாணவர்களுக்கு லயன் க.டினேஸ் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைக்கும் லயன் பா.மரியதாஸ் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்கும் என இந்த வருடம் முடிவுறும் வரைக்கும் போசாக்கு உணவு வழங்குவதாகத் தெரிவித்தனர். அதன்படி அதற்கான முற்கட்ட உதவியாக ஒரு கிழமைக்குத் தேவையான போசாக்குணவுக்கான நிதியுதவியை லயன் க.டினேஷ் முன்பள்ளி ஆசிரியரிடமும் லயன் பா.மரியதாஸ் கலை மதி சனசமூக நிலைய நிர் வாகசபை உறுப்பினரிடமும் வழங்கி வைத்தனர். (05)

# வட்டமடு உள்ளிட்ட விவசாயக் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் – அதாஉல்லா



(ஏ.எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக விடுவிக்கப்படாமல் இருக்கும் வட்டமடு உள்ளிட்ட விவசாயக் காணிகள் மிக விரைவில் விடுவிக்கப்படும் என்று தேசிய காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட்டமடு, பொத்துவில் மற்றும் சம்மாந்துறை போன்ற இடங்களில் உள்ள பல விவசாயக் காணிகள் நீண்ட காலமாக விடுவிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

இக்காணிகளை விடுவிப்பதற்காக கடந்த பல மாதங்களாக பல தரப்பு மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

விவசாயிகளுக்குநிரந்தரத்தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க எடுக்கப்பட்ட பல கட்ட முயற்சிகளில் அதற்கு சாதகமாக செயல்பட்டவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய மலைநாட்டில் தொடர்ந்து கனமழை



நுவரெலியா மாவட்டத்தில் நேற்று இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் இப் பகுதியில் அதிக அளவில் குளிரும், பனி மூட்டமும் காணப்பட்டது.

மத்திய மலைநாட்டில் எங்கு பார்த்தாலும் பணி மூட்டமாகக் காணப்படுகின்றது. நுவரெலியா கொழும்பு ஏ-7. வீதியில் பல்வேறு இடங்களில் அதிகளவில் பனி மூட்டம் காணப்படுவதால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபட வேண்டுகோள் விடுத்துள்ளார். தொடர்ந்து மழை பெய்து வருவதால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப் பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் நாளாந்த பணியை மேற்கொள்ள முடியாத படி சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# மட்டக்களப்பில் கஞ்சாவுடன் சிக்கிய இளைஞர் கைதானார்

மட்டக்களப்பில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 22 வயதான இளைஞர் ஒருவர் திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்-யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாகவும், குறித்த இளைஞரிடம் இருந்து 800 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு 20,000 ரூபா தண்டப்பணம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# கைவிடப்பட்ட வீடுகளில் சமூகச் சீர்கேடு அதிகரிப்பு

## கல்முனை, இஸ்லாமபாத்தில் இந்த அவலம்

அம்பாறை மாவட்டத்தில், சுனாமியால் சேதமடைந்து மக்களால் கைவிடப்பட்டுள்ள வீடுகளில் அண்மைக்காலமாகப் பல சமூக சீர்க்கேடான விடயங்கள் அரங்கேறி, வருவதாக அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

குறிப்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியில் காணப்படும் கைவிடப்பட்டுள்ள வீடுகளில், உள்ளூர் வாசிகளும், வெளியூரைச் சேர்ந்த சிலரும், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதோடு, பாலியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியானது விசப்பாம்புகளின் வாழிடமாக உள்ளதாகவும் இதன் காரணமாக அப்பகுதியில் வாழும் மக்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவ்விடத்தை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்வீடுகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோதமான செயற்பாடுகளை கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# பஹ்ரியாவிலிருந்து எட்டு வீரர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு













கிழக்குமாகாணபாடசாலைமெய்வல்லுநர் போட்டியில் கல்முனை கமு/கமு/அல் பஹ்ரியா பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி வீரர்கள் இரண்டு தங்கம் ஒரு வெண்கலம் பெற்று எட்டு மாணவர்கள் தேசிய மட்ட பாடசாலை மெய்வல்லுநர் போட்டிக்குத் தெரிவாகினர்.

கடந்த 05 தினங்களாக கந்தளாய் லீலாரத்தின மைதானத்தில் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட பாடசாலை மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 16 வயதின் கீழ் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றிய கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயா மாணவனான எம். எம். எம். றிஹான் முதலாம் இடத்தினையும் 16 வயது கீழ் பெண்கள் பிரிவில் என். எப்.சஜா முதலாம் இடத்தினையும் பெற்று தங்கப் பதக்கத்தினை தனதாக்கிக் கொண்டனர்.

இதேவேளை16வயதுகீழ்பெண்களுக்கான 4ஒ100 அஞ்சல் ஓட்ட நிகழ்ச்சியில் என். எப்.மின்ஹா, ஜெ. எப். லுபாப், என். எப்.சஜா, எம். எஸ். எப். சும்றா, எம். என். எப்.ஹிபா, ஆர். எப்.இனா ஆகியோர் வெண்கல பதக்கத்தையும், இருபது வயது கீழ் பிரிவில் ஏ. ஆர் எம். அப்ஹம் 200மீற்றர், 400மீற்றர் போட்டிநிகழ்ச்சிகளில்நான்காவதுஇடத்தையும் பெற்று பாடசாலைக்கும், கல்முனை கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களில் மொத்தமாக எட்டு வீரர்கள் தேசிய மட்ட பாடசாலை மெய்வல்லுநர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(05)

## 5 கொங்ரீட் ஆணிகளை உட்கொள்ளவைத்தனர் பணிப் பெண்ணாகச் சென்றவர் குற்றச்சாட்டு



சவூதிஅரேபியவிற்குபணிப்பெண்ணாக சென்ற மாத்தளை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 'தான் பணிபுரிந்தவீட்டில்தன்னை5கொங்ரீட் ஆணிகளை விழுங்க வைத்தனர்' என வத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாத்தளை அல்கடுவ பிரதேசத்தில் உள்ளதோட்டப்பகுதியில்வசிக்கும்ஒரு பிள்ளைக்குத் தாயான இருபத்தொரு வயதான தியாகசெல்வி என்பவரே இவ்வாறு முறைப்பாடு அளித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

கடந்த ஜூன் மாதம் கொழும்பில் உள்ள தனியார் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக வீட்டுப் பணிப்பெண் வேலைக்காக சவூதி சென்றேன். அங்கு நான் பணிபுரிந்து வந்த வீட்டில் உள்ளவர்கள் எனக்கு உணவுவழங்காமல்உடல்ரீதியாகவும், உள ரீதியாகவும் சித்திரவதை செய்து வந்தனர்.

இதனையடுத்து எனது நிலை குறித்துவேலைவாய்ப்புநிறுவனத்திடம் தெரிவித்திருந்தேன். இதனால்கோபமடைந்த வீட்டு உரிமையாளரும் அவரின் தாயாரும் ஒன்றாக சேர்ந்து என்னை கொடூரமான முறையில் தாக்கியதோடு, பின்னர் 5 கொன்கிரீட் ஆணிகளை விழுங்கும்படியும் கட்டாயப்படுத்தினர்.

பின்னர், துணிகளை உலர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் வெள்ளை இரும்பால் செய்யப்பட்ட ஸ்பிரிங் ஒன்றையும் விழுங்கவைத்தனர். இதன்போது குறித்த இரும்புத் துண்டு தனது தொண்டையில் சிக்கியது.

சில நாள்களுக்குப் பின்னர் எனது வயிறு மற்றும் வாயில் இருந்து இரத்தம் வரத் தொடங்கியதையடுத்து குடியிருப்பாளர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதன்போது என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள் எனது வயிற்றில் ஐந்து இரும்பு ஆணிகள் இருப்பதைக் கண்டு, எனக்கு சிகிச்சை அளிக்க முன்வந்துள்ளனர்.அதன்பின்னர்சவூதி வைத்தியசாலையொன்றில் உள்ள வைத்தியர் ஒருவரின் தலையீட்டின் மூலம்தூதரகத்தின் ஊடாகநான் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டேன்.

பின்னர் கண்டி வைத்தியசாலையில் பரிசோதனை செய்து பார்த்த போது எனது வயிற்றில் மேலும் இரண்டு ஆணிகள் இருப்பது எக்ஸ்ரே மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து இரண்டு நாள்களுக்கு முன்பு மருத்துவர்களால் ஓர் ஆணி அகற்றப்பட்டதோடு மற்றொரு இரும்பு ஆணி தனது வயிற்றின் பின்புறத்தில் தற்போதும் உள்ளது' இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு அறிவித்த போதும் அவர்கள் பதிலளிக்கவில்லை எனத் தெரிவித்த பெண்ணின் தாயார், கணவனை பிரிந்து குழந்தையுடன் தனியாக வாழும் தனது மகள், குழந்தையின் எதிர்காலத்திற்காகவே வெளிநாடு சென்றார் எனக் கவலை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இந்த சம்பவம் தொடர்பில்வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் விசேட விசாரணைகளை தற்போது முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

### சம்மாந்துறையில்

## ஆரம்ப பராமரிப்பு சுகாதார பிரிவு பிரதேச வைத்தியசாலையாகியது

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட செந்நெல் கிராமம் ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவை மக்களின் தேவை கருதியும் சிகிச்சைகளுக்கான ஆளணி மற்றும் முக்கிய வளங்களை பெறுவதற்காகவும் பிரதேச வைத்திய சாலையாக தரம் உயர்த்துவதற்கானதேவையைஉணர்ந்து தொடர்ந்தேர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன்விளைவாக கடந்த 2023.07.28 ஆம் திகதி சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் இன்று அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் இன்று நடைபெற்ற இம்முக்கிய கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களும் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம். மாஹீர் அவர்களும் பங்குபற்றியிருந்ததுடன் குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான நியாயம் மற்றும் மக்களின் அபிப்பிராயம்தொடர்பில்விரிவாக விளக்கியிருந்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சின் தரமுயர்த்தல் குழுவானது செந்நெல் கிராமம் ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப்பிரிவை பிரதேச வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துவதற்கான கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்திய சாலையாகத் தரம் உயர்த்துவதற்காக பெரிதும் ஒத்துழைத்த முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ ஆர் எம் தௌபீக் அவர்களுக்கும் இந்நாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்மெலிண்டன்கொஸ்தா அவர்களுக்கும் மாகாண திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஏனைய பிரிவுதலைவர்களுக்கும்விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பார் தெரிவித்திருந்தார். (05)

## அநியாயக்காரரர் நீங்கள்தான் நாங்கள் ஒருபோதும் இல்லை

### கலையரசனுக்கு - யஹியாகான் பதில்

தமிழ் - முஸ்லிம்கள் மத்தியில் பிரிவினைவாதத்தைதோற்றுவித்து - அதில் குளிர்காய கலையரசன் எம்.பி. எடுக்கும் முயற்சி மிகவும் கண்டனத்துக்குரியது என மு.கா. பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்முனை - பாண்டிருப்பில், சென்ற சனிக்கிழமை நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. கலையரசன் - தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைசீர்குலைக்கும்வகையில் உரையாற்றி இருந்தார். இவரின் இந்தக்கருத்துக்குகடும்தொனியில் பதிலளித்துள்ள யஹியாகான் மேலும்குறிப்பிட்டுள்ளவைவருமாறு-

தேர்தலுக்காகவும் - மீண்டும் தேசியப் பட்டியல் மூலமாக எம்.பி. பதவியை பெறுவதற்காகவும் சமுகங்களை பிரித்தாளும் கைங்கரியத்தை கலையரசன் போன்றோர் நிறுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் நீங்கள் வெற்றி பெறப் போவதுமில்லை, தேசியப் பட்டியல் கிடைக்கப் போவதுமில்லை என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதற்காக - தமிழ், முஸ்லிம் சமுகங்களைக் கூறு போட எடுக்கும் முயற்சிகள் கண்டனத்துக்குரியவை. தமிழ் மக்கள் அல்லது தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக / ஒன்றுபட்டு இல்லை என்பது உங்களைப் போன்றோரின் செயற்பாடுகளே அதற்குக் காரணமாக அமைந்திருந்தன. முஸ்லிம் சமுகத்துக்கு பெரும் அநியாயங்களை செய்தது - உங்களைப் போன்றோரின் இவ்வாறான கடந்தகால இனவாத கருத்துக்கள்தான். நாங்கள் ஒருபோதும் , தமிழ் சமுகம் வேதனைப்படும் வகையில் எங்கும்எப்போதும்கருத்துக்களை பிரதிபலித்தமை கிடையாது. இனப்பிரச்சினை தீர்வின் போது - நியாயமான தீர்வு தமிழ் சமுகத்துக்கு கிடைக்க வேண்டும் என்றே அன்றும் இன்றும் வலி யுறுத்தி வருகின்றோம். ஆனால், அவ்வாறான நியாயமான தீர்வில் - முஸ்லிம் சமூகம் பாதிக்கப்படக் கூடாது என்று எங்கேயாவது ஓரிடத்தில் நீங்கள் கூறியிருக்கிறீர்களா ? இல்லை. ஒருபோதும் இல்லை.

அற்பஅரசியலுக்காகஇன்னும் இன்னும் இரு சமுகங்களையும் பகடைக்காயாகப் பயன்படுத்த உங்களைப் போன்ற - மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் முயல்வது ஆரோக்கியமான விடயமல்லஎன்றும்யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார். (05)



யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்